புரிகின்ற ஆசிரியர்களுக்கு 1-ம் தேதி சம்பளம் அளிப்பதற்காக நிரந்தர மான சட்டம் இயற்றப்பட்டதுபோல, நகராட்சிகளுக்கும் செய்யப்படுமென்று கூறினார்கள். அந்த அடிப்படையில் விதி முறைகளைத் திருத்துவது எந்த நிலையில் உள்ளதென்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது சட்ட ரீதியாக மாற்றியமைக்கப்பட்டு, எல்லா நகரசபைகளிலும் 1-ஆம் தேதி சம்பளம் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1-ஆம் தேதி சம்பளத்தை வழங்குவதற்கான முயற்சிகளைப் பற்றி ஆராயும்படியாக அந்தத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அது பற்றி உள்ளாட்சித் துறை முடிவு எடுக்க வேண்டும். அதனுடைய நிலைமை களை ஆராய்ந்துதான் சொல்ல முடியும். எனவே தனிக் கேள்வி போட் டால், நிலைமைகளை ஆராய்ந்து சொல்லப்படும். மேலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

(2) நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந்துள்ள தொழில் தகராறு காரணமாக தொழிலாளிகள் பாதிப்பும், பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ்நிலைகள் உருவாகி வருவதும்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந் துள்ள தொழில் தகராறு காரணமாக பல நூற்றுக்கணக்கான தொழிலா ளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதும், தற்போது நிலவி வருகிற பதட்டமான நிலைமையும், அதனையொட்டி பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ் நிலைகள் உருவாகி வருவதும் குறித்து."

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நாகப்பட்டினத்தி லுள்ள இந்திய ஸ்டீல் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 600. மேற்படி தொழிலாளர்கள் நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம் மூலமாக, கடந்த ஆண்டுக்குக் கொடுத்த தொகைக்குக் குறையாமல் 1972–73 ஆண்டுக்கு மிகை ஊதியம் (போனஸ்) கொடுக்கவும், தற்போது அகவிலைப்படி கணக்கிடும்முறையை மாற்றி அமைக்கக்கூடாது என்றும் ஒரு தொழில் தாவா எழுப்பி யுள்ளனர். மேற்படி தொழிலாளர்கள் தாமதமாக வேலை செய்வதாகக் குற்றம் சாட்டி, நிர்வாகம் 4—11—73 முதல் கதவடைப்பு செய்துள்ளது. சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து 7—11—73 & 8—11—73 தேதிகளில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறவில்லை.

எல்லைமீறி தொழிற்சாலைக்குள் சென்றதற்காக 16—11—73-ம் தேதி 18 நபர்கள் கைது செய்யப்பட்டனர். நாகப்பட்டினம் கோட்டாட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன் மறியல் செய்ததற்காக (17—11—73 முதல் 24—11—73 முடிய 18—11—73 நீங்கலாக) நாளொன்றுக்கு

12 பேர் வீதம் 84 நபர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 102 பேர்களையும் நாகப்பட்டிணம் குற்ற இயல் நீதிபதியின் முன்பு நிறுத்தப்பட்டது.

இது சம்பந்தமாக மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துமாறு தொழிலாளர் துறை ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை எவருடையதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை திரு. ராஜம் ராமசாமி அவர்களுடையதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

விதி 23 (1) நிறுத்திவைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை, 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை —

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை, 1973-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 1-ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

@ 51-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.